# கொழும்பு அதிமேற்றிராசனத்தின் இரு துணை ஆயர்களின் அபிஷேகம்

துணை ஆயர்கள்: ● எட்மன்ட் பேர்ணாந்து அடிகள் ● ஒஸ்வல்ட் கோமிஸ் அடிகள்


# காவலன்

அச்சு: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300.
Registered at the Ceylon G. P. O. as a Newspaper

53-ம் புத். | யாழ்ப்பாணம், 1968-ம் ஆண்டு ஆடி 20-ந் உ சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 27-ம் இல


சென்ற 17-ம் திகதி புதன்கிழமை இலங்கையின் கத்தோலிக்க திருச்சபையின் சரித்திரத்தில் முன்ஒருபோதும் நடைபெறுத ஓர் அரிய சம்பவம் கொழும்பில் நடைபெற்றது. அன்றுதினம், இருகுருமார் மேற்றிராணிமாராக அபிஷேகம் செய்யப்பட்டனர். அபிஷேகச் சடங்கு கொழும்பில் முதன்முதலாகத் திறந்த அரங்கில் நடந்ததும் இவ்வைபவத்துக்குச் சிறப்பு அளித்தது. சென் லூசியா தேவாலயத்துக்கு அருகாமையிலுள்ள சென் பெனடிக்ற் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் சுமார் 15,000 மக்கள் முன்னிலையில் கருதினல் கூறே ஆண்டவர்களால் வந்தனைக்குரிய எட்மன்ட் பேர்ணாந்து அடிகளாரும், ஒஸ்வல்ட் கோமிஸ் அடிகளாரும் மேற்றிராணிமாராகச் சென்ற புதன்கிழமை காலை அபிஷேகம் செய்யப்பட்டனர். பாப்பரசரின் ஸ்தானிகராகிய மகாவந்தனைக்குரிய ஸ்ரெரேறேரு அடிகளார் வைபவத்தில்கலந்துகொண்டார். நமது நாட்டு அரசாங்கப் பிரதிநிதிகளும், பிறநாட்டு அரசாங்கத் தூதுவர்களும், பிறசமயத்தவர்களும், கத்தோலிக்கர்களுமாகிய திரளான மக்கள் இவ்வைபவத்தில் பங்குபெற்றுக் கொண்டனர். கருதினல் கூறே அவர்களுக்குத் துணை அபிஷேகர்களாக வந்தனைக்குரிய அந்தோனி சேரம் அடிகளாரும், வந்தனைக்குரிய தியோகுப்பிள்ளை அடிகளாரும் கடமையாற்றினர்.

## சிலாப மேற்றிராசனத்துக்கு ஒரு துணை ஆயர்

சென்ற சில ஆண்டுகளாகக் கொழும்பு அதிமேற்றிராசனத்தின் துணை ஆயராகக் கண்ணியத்துடன் தொண்டாற்றிவந்த வந்தனைக்குரிய மார்க்கஸ் பெர்ணாந்து அடிகளாரை பரிசுத்ததந்தை 6-வது சின்னப்பபாப்பரசர் சிலாபமேற்றிராசன துணை ஆயராக அப்பிரிவின் அடுத்த மேற்றிராணியாராகும் உரிமையுடன் நியமித்திருக்கிறாரென்ற செய்தி வத்திக்கானிலிருந்து இம்மாதம் 10-ம் திகதி வெளிவந்துள்ளது. மார்க்கஸ் பெர்ணாந்து அடிகளார் சிலாபத்திலேயே பிறந்தவர். அவர் தந்தையார் நீர்கொழும்புப் பிரிவைச் சேர்ந்தவராயினும் தாயாரின் ஜெனனபதிசிலாபமே. அடிகளார் தமது புதியபதவியை ஏற்றுக்கொள்வதற்கு ஆடிமாத இறுதியில் அங்கு செல்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## பெண்களுக்கு குருத்துவம்

"வத்திக்கான் டெல்லா டொமினிக்கா" என்னும் பத்திரிகை ஆசிரியர் சென்றவாரம் "பெண்களுக்குக் குருத்துவம் என்பது வேலையில்லாதவர்களின் வீண்பேச்சு" என்று வரைந்திருக்கிறார். இக்காலத்தில் பெண்கள் சில உயர்ந்த பதவிகளில் அமர்ந்திருப்பதனால் குருத்துவத்துக்குமே அவர்கள் உரியவர்கள் என்று நாம் எவ்வாறு கூறலாமென அவர் கேட்கின்றார். கிறிஸ்துநாதரின் போதனைகளிலும், சாதனைகளிலும், திருச்சபையின் பாரம்பரியத்திலும் இதற்கு ஆதாரமில்லையென்பது அவர் தரும்விளக்கம்.

## சினிமாப்படங்களில் துப்பாக்கி ஏன்?

உலகப்பிரசித்திபெற்ற பேர்ளின் சினிமாத் தொழிலாளர் விழாவில் பிரசங்கம்செய்த வண. பேர்க்சுவாமியார், சினிமாக் காட்சிகளிலும், தொலைகாண் காட்சிகளிலும் நடைபெறும் துப்பாக்கிப்பிரயோகங்களினால் மக்கள் மனதில் ஏற்படும் பலாபலன்களை எடுத்துக்காட்டி, கூடியளவு துப்பாக்கிப் பிரயோகத்தை அகற்றிவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இன்று உலகில் துப்பாக்கிச் சூட்டினால் நடைபெறும் கொலைகளுக்கு இத்தகையகாட்சிகள் பெரிதும் பொறுப்பாக இருக்கின்றனஎன்பது குருவானவரின் அபிப்பிராயம்.

## சிலசெபங்களுக்கு சில பலன்களில் மாற்றங்கள்

வத்திக்கானில் இருந்துவரும்செய்தி ஒன்றின்படி சிலசெபங்கள், கிரிகைகள், முதலியனவற்றுக்கு இதுகாலவரையும் திருச்சபை கொடுத்துவந்த "பலன்கள்," சிலவற்றில் மாற்றங்கள் விரைவில் அறிவிக்கப்படுமென அறிகின்றோம். இன்று சில "பலன்"களை அடைகிறதற்கு குறிக்கப்பட்ட சில செபங்கள் சொல்லவேண்டும். அல்லது சில கிரிகைகள் செய்யவேண்டும். ஆனால் பாப்பரசர் செய்ய இருக்கும் மாற்றங்கள் அமுலுக்கு வந்தவுடன் இப்பலன்களை நாம் வேறு விதங்களிலும் அடையக்கூடியதாக இருக்கும்.

## எல்லாவற்றிலும் மாற்றங்களை விரும்பவேண்டாம்

"விசுவாச வருடத்தை" முடிவுக்குக் கொண்டுவந்த ஒருசிறந்த வைபவத்திலே 50,000 கத்தோலிக்கமக்கள்கூடி இருந்த சம்பேதுரு தேவாலயசதுக்கத்தில் 6-வது சின்னப்பபாப்பரசர் செய்த பிரசங்கத்தில் சில கத்தோலிக்கர் சகலத்திலும் மாற்றத்தைக்காண விரும்பும் மனப்பான்மையைக் கண்டித்தார். "மாற்றங்கள்காண வேண்டிய கருமங்களுமுண்டு. மாற்றமுடியாத கருமங்களுமுண்டு" என்று வற்புறுத்தினார் பரிசுத்த தந்தை. பாப்பரசரின் வழுவாவரம், மாசில்லா உற்பவம் முதலியவற்றில் திருச்சபையின் பரம்பரையான விசுவாசம் என்றும் மாறப்போவதில்லை என்று சகலத்திலும் மாற்றம் விரும்பினவர்களின் காதுகளில் நுழையுமாறு எடுத்துக் கூறினார்.

## குருமார் பயிற்சி முறையில் மாற்றங்கள்

கத்தோலிக்க கல்விமுறைக்குப் பொறுப்பாயிருக்கிறசபை குருமாணவர்பயிற்சி முறைகளிற் சிலமாற்றங்கள் செய்யப்பட இருப்பதாகவும். ஆரம்பத்தில் அம்மாற்றங்கள் உயர்நிலை மாணவர்களையே தாக்குமெனவும் அறிவித்திருக்கின்றது. இச்சபையின்தலைவர் கருதினல் கரோன் அடிகளாரே.

## செக்கோசிலவாக்கியாவின் ஜனநாயக வேகத்துக்கு ருஷியாவின் தடை

சென்ற சில மாதங்களாகச் செக்கோசிலவாக்கியாவின் கொமியூனிஸ்த அரசாங்கத்தின் தன்மையில் சில குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுவந்ததை நேயர்கள்அறிவர். மக்களை அடக்கி ஆளும் விருப்புக்கொண்ட தலைவர்கள் நீக்கப்பட்டு சுதந்தர ஆட்சியில் விருப்புள்ளவர்கள் தலைமைப்பீடத்தில் வைக்கப்பட்டனர்—ஆனால் செக்கோசிலவாக்கியாவின் ஜனநாயகபோக்கை அவதானித்த ருஷியா அப்போக்குக்கு தடைசெய்ய முன்வந்திருப்பதாக அண்மையில் கிடைத்த செய்திகள் கூறுகின்றன. வார்சோ ஒப்பந்த கொண்டாட்டத்துக்கென செக்கோசிலவாக்கியாவுக்குச் சிலவாரங்களுக்குமுன்வந்த ருஷியதுருப்புகள் திரும்பவும் ருஷியா செல்லாது அந்நாட்டிலேயே தங்கியிருப்பது அத்தேச தலைவர்களுக்குக் கிலேசத்தை அளித்திருக்கின்றது.

## பாப்பரசர் வாழ்த்துகின்றார்

அன்று தமது வாராந்தப்பேட்டிக்குச் சமூகமளித்திருந்த செக்கோசிலவாகிய யாத்திரிகர்கள் குழுவொன்றுக்குப் பாப்பரசர் விசேடவாழ்த்துக்கள் கூறி "வேதவிசுவாசத்திற்காக நீங்கள் எவ்வளவோ உபத்திரவப் பட்டிருக்கிறீர்கள்; நமது முழுஇருதயத்தோடும நாம்உங்களை வரவேற்கின்றோம்; கத்தோலிக சமயத்திற்குப் பிரமாணிக்கமாயிருப்பதையிட்டு உங்கள்நாட்டுக்கு நாம்வந்தனம் கூறுகின்றோம்; எவ்வளவுதூரம் நீங்கள் உபத்திரவப் பட்டீர்கள் என்பதையும், உங்கள் கத்தோலிக்க பாரம்பரியம் பழுதுறாது அதனைப் பாதுகாப்பதிலே எத்துணை பெரும் உத்தமசான்று அளித்திருக்கிறீர்கள் என்பதையும் நாம் அறிவோம்" எனக் கூறலானார்.

## எமது சமூகசேவைகளின் தன்மையில் மாற்றங்கள் வேண்டும்

பீற்றர்பிள்ளை சமூகநிலையத்தின் மூன்றாவதுவருட கூட்டத்தில் அந்நிலையத்தின் தலைவர் வண. திசாபாலசூரிய சுவாமிகள் அண்மையில் செய்த சொற்பொழிவில் எமது சமூகசேவைகளின் தன்மைகளில் தீவிரமாற்றங்கள் ஏற்பட வேண்டுமென்று கூறினார். தற்போது நடைபெறும் சமூகசேவைகள், இன்றைய குறைபாட்டான முறையை மாற்றியமைக்க முயற்சிக்காது, அம்முறையினால்வரும் தீமைகளை ஒருவாறு சாந்திசெய்து வருகின்றமுறை ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்லஎன சுவாமியார் எடுத்துக்காட்டினார். சமூகசேவைகளின் நன்மையைப் பெற்றுவருகிறவர்களைப் பிறரின்தயவில் தங்கியிருப்பவர்களாக ஒருபோதும் எவரும் எண்ணிக்கொள்ளப்படாது. தமக்கு உரியவற்றை அவர்கள் பெறுகிறார்கள் என்பதே சுவாமியவர்களின் கூற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஆடி — 1968

21 ஞா. பரி. ஆவி விழாவுக்குப்பின் 7-ம் ஞாயிறு [ப]
22 தி. புனித மரியமதலேனம். [வெ]
23 செ. புனித அப்போலினேரிஸ் [சி]
24 பு. கிழமைப்பூசை [ப]
25 வி. புனித பெரிய யாகப்பர் [சி]
26 வெ. புனித கன்னிமரியாயின் அன்னையான புனித அன்னம்மாள் [வெ]
27 ச. சனிக்கிழமையில் புனிதமரியன்னையின் பூசை. [வெ]

சத்தியவேத
பாதுகாவலன்

1968-ம் ஆண்டு ஆடி மீ 20-ந்உ

# இரு புதிய ஆயர்

இலங்கைத்திருச்சபையின் சரித்திரத்திலேயே முதன்முறையாக இம்மாதம் 17-ம்தேதி இருஆயர்கள் ஒரேமுறையில் அபிஷேகம் செய்யப்பட்ட திருச்சடங்கு நடைபெற்றது. அதிமேற்றிராசனத்தின் தலைநகரில் பல்லாயிரக் கணக்கில் குழுமியிருந்து இவ்வைபவத்தைக் கண்டுகளித்த மக்களுடன் நாமும் அதில் மானசிகமாகப் பங்குபற்றினேம். புதிய ஆயர்கள் இருவருக்கும் எமது உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, இறைவன் அவர்களுக்கு நீண்ட வாழ்நாளையும், உடல் நலத்தையும், அருட்கொடைகளையும் கொடுத்தருள வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேம். குருத்துவத்தின் பூரணத்துவத்தை அடைந்து போதித்தல், புனிதப்படுத்தல், ஆட்சி செய்தல் ஆகிய முப்பெரும் பணிகளுக்கு தாமே தெரிந்துகொண்டவர்களுக்கு, அப்பணிகளைத்தமது சித்தத்தின்படி நிறைவேற்றுவதற்குத் தேவையான அருட்கொடைகளை இறைவன் ஏராளமாக அருளுவார் என்பதிற் சந்தேகமில்லை.

திருச்சபை தன்னைப் புதுப்பித்துக்கொண்டிருக்கும் இந்நாட்களில் ஆயர்களுக்கு வழக்கத்துக்கு அதிகமான பொறுப்புக்களும் வேலைகளும் இருந்துவருவதை யாவரும் அறிவர். புதிய கருத்துக்களை ஆராய்ந்து, புதிய ஒழுங்குகளைப் பரிசோதித்து நடைமுறைக்குவரப் பலருடைய உழைப்புத் தேவைப்படுகிறது. திருச்சபை அங்கத்தினர் யாவருமே இதிற் பங்குகொள்ள வேண்டியவராயினும் ஆட்சிப்பீடத்திலுள்ளவர்களின் தூண்டுதலிலும் வழிகாட்டுதலிலுமே அது தங்கியுள்ளது. இந்த அலுவல்கள் ஆயர்களுக்கு அதிகப்படியான பொறுப்புக்களைக் கொடுத்ததால் அவர்கள் மக்கள் நலனில் அக்கறையுள்ள தந்தையராக இராது திறமைமிக்க ஆட்சியாளராக மட்டும் தோற்றமளிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படக்கூடியதாயிருந்தது. இத்தகைய நிலையைத் தவிர்க்கவே திருச்சபை துணை ஆயர்களை நியமிக்க எண்ணங்கொண்டது. எமது இளம் ஆயர்கள் இருவரும் கருதினல் ஆண்டவரின் வலக்கையையும் இடக்கையையும் போன்று அவருடைய பொறுப்புக்களைப்பகிர்ந்துகொள்வதால் அவர் தமது முதன்மையான பணியான மேய்ப்புப்பணியில் பூரண கவனம் செலுத்த முடியும்.

ஆயர் பதவியின் மகிமை மிகப் பெரிது. ஆனல் அதன் பொறுப்புக்களும் பளுவானவை. இலங்கைத் திருச்சபையின் எதிர்காலத் தலைவர்களான, எம் துணை ஆயர்கள் இப்பளுவான கடமைகளை ஆற்றுவதிலேயே நிறைவுகண்டு கிறிஸ்துவின் ஒளிவிளக்குகளாகத் திகழ்வார்களாக.

# விலை மதிக்கப்படாத இரத்தம்

— பி. ஜே. அமிர்தநாயகம் —

தேவனின் மரணசாதனம் என்னவெனில் "இதோ உன் தாயார்" புனித யுவானியார்மூலம் தேவாதிதேவன், நமக்கு இரட்சணியமளிக்கும் தேவன், தனது தாயாரையும் அவருடைய சகல செல்வங்களையும் நமக்கு அளித்திருக்கிறார். அந்தச் செல்வமே ஆதிமாதத்தில திருச்சபையாகிய நமது மாதா நமது விசேஷ ஆராதனைக்கு வைத்திருக்கிறது. எல்லோரையும அழைக்கிறது. இதுவே யேசுவின் விலைமதிக்கப்படாத திருஇரத்தம். இந்தச் சீவிய ஊற்றை நமக்குத் திறக்கவே வார்த்தையானவர் மாமிசமானர். சிலுவையில் அறையுண்டு மரித்தார். அதற்குப் பூரண உடந்தையாயிருந்தார் அந்த இரத்தத்தின் தாயான தேவதாய். அவரே திராட்சைக்கனி. யேசுவின் திரு இரத்தமே, அதிலிருந்துபெற்ற விலைமதிக்கப்படாத இரசம். இந்த இரசமே எல்லோருக்கும் சீவியமளிக்கும் விலைமதிக்கப்படாத திருஇரத்தம். இவ்விரத்தத்தின் பயனே இறைமக்களான திருச்சபை. இவ்விரத்தமே பிதாப்பிதாக்கள் தீர்க்கதரிசிகளையும், அப்போஸ்தலர் கன்னியர்களையும், வேதசாட்சிகள் வேதபாரகரையும் உருவாக்கினது. பாவவிமோசனமளிக்கிறது. நித்திய பேரின்பத்திற்கு எம்மெல்லோரையும் பாத்திரவான்கள் ஆக்குகிறது.

## கண்டவரே சாட்சி

புனித அருளப்பராகிய சுவிசேஷகர் தாமே இதற்குக் கண்கண்ட சாட்சி. வேறு என்ன தேவை? அவர் தமது நிருபத்தில் எழுதுவதாவது: "எப்படி பிதா, சுதன், தூயஆவி ஆகிய மூன்று ஆட்களும் ஒரு சருவேசுரனே அதேபோல் தூயஆவியும் தண்ணீரும இரத்தமும் ஒன்றுதான். தண்ணீர் கிறிஸ்தவர்கள் பெறும் ஞானஸ்நானத்தையும், இரத்தம் யேசுவின் நற்கருணையையும் குறிக்கின்றன. எப்படி விசுவசித்து ஞானஸ்நானம் பெறுகிறவன் இரட்சிக்கப்படுவானே அப்படியே யேசுவின் நற்கருணையாகிய திருஇரத்தத்தைப் பெறுகிறவன் என்றும் சீவிப்பான். ஏனெனில் இவன் தூயஆவியாலே சீவிக்கிறான். இச்சீவியத்தைச் சீவிக்கிறவன் பரமதிரித்துவத்தில் சீவிக்கிறான். கடவுளிலும் கடவுளாலும் சீவிக்கிறான். இச்சீவியத்தை நற்கருணைப்பலிச் சீவியம் என்றும் அழைக்கிறோம், இதுவே கிறிஸ்தவ சீவியம், சகல புனிதர்களும் இச்சீவியத்தின் பரமானந்தத்தை மோட்சத்தில் சதாகாலம் பெறுகிறார்கள்.

## நன்றியுள்ளவன் மனிதன்

நன்றி மனிதனின் சிறப்பான இலட்சணம். அழிந்துபோகும் நன்மைகளை மற்றும் மனிதரிடம்பெற்று என்றும் நன்றிகாட்டும மனிதன நித்தியத்திற்குரிய அழியாத நன்மைகளைக் குறைவறக் கடவுளிடம்பெற்ற மனிதன் எப்படி நன்றிகேடாய் நடக்கக்கூடும்? சமூகமே ஏற்றுக்கொள்ள மாட்டாது நன்றியீனத்தை. எப்படிக் கடவுள் ஏற்பார்? எனவே, எங்களுடன் என்றும்வாசஞ்செய்ய மிகவும ஆவலுடன் ஆசிக்கும்தேவாதிதேவன நற்கருணைப் பேழையில் இடைவிடாது காத்திருப்பது எமது நன்றிக்குத் தான். நாம் என்றும் மனிதராய்ச் சீவிக்க விரும்பினல் தேவ மக்களாகவேண்டும். நற்கருணையில் அப்பத்தின் குணங்களில் இருப்பதுபோல் தோன்றினும் அது விலைமதிக்கப்படாத யேசுவின் திரு இரத்தம். இதுவே தேவதாயாரைத் தேவனுக்குத் தாயாகவும், அமல உற்பவமாகவும், பரலோக பூலோக இராக்கினியாகவும் செய்தது. இதுவே, புனித இராயப்பரின் வழுவாவரமாக இருந்து திருச்சபையின் கற்பாறையாக அவரை ஆக்கினது. இதுவே, புனித மரியமதலேனம்மாளைப் பாவக்கிடங்கிலிருந்து உயர்த்தி தூயஆவியின் உன்னத பத்தினியாக்கினது. நன்றிகாட்டிப் புனிதர்களாவோம்.

## ஒவ்வொருவரையும் தெரிந்தவர் கடவுள்

தனது மிகப்பிரிய குமாரனின் இரத்தத்தின் பலனுக்கு ஒவ்வொருவரையும் தெரிந்தவர் எல்லாம் வல்லதேவன். மனிதனை மாத்திரம் தெரிந்துகொண்டார். விளங்கக்கூடியவன் மனிதன் மாத்திரம். நன்றிகாட்டக்கூடியவனும் மனிதன் மாத்திரமே; அப்படிப் படைத்தவர் எல்லாம் நன்மைத் தனமான தேவன் மாத்திரமே. இதற்கே வார்த்தையானவர் மாமிசமானர். சிலுவையில் பலியானர். எல்லாம் முற்றிற்று என்று வாக்களித்தார். கடவுளைப் பொறுத்தளவில் எல்லோரும நித்திய பரமானந்தத்திற்கே இரட்சிக்கப்பட்டார்கள். மனிதனைப் பொறுத்தளவில் பகுத்தறிவுள்ள மனிதன் இதை விளங்கவேண்டும். நன்றிகாட்டி நடக்கவேண்டும். ஒருதுளி இரத்தமேனும் தனக்கென வையாது வார்த்தையானவர் மரணபரியந்தம் ஒவ்வொரு மனிதனையும் நேசித்தார். பிரதி நேசத்தையே எதிர்பார்க்கிறோம். எனவே, சகலரும் தேவனின விருந்தாகிய இரத்தத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம. இரத்தமாகிய நற்கருணையால் சீவிப்பவனே நன்றியுள்ளவன். தாமதிக்கப்படாது; சாட்டுப்போக்குச் சொல்லப்படாது; காணிவாங்கிவிட்டேன், கலியாணம் செய்துகொண்டேன், எருதுக்கள் வேண்டிவிட்டேன் என்று மண்ணாசை பெண்ணாசை பொன்னாசையால் வரும் போலி நியாயம் சொல்லக்கூடாது. இவைகளே உலோகாயதமுகாந்திரங்கள்; அழைப்பவர் தேவன்; தெரிந்தவரும் அவரே. ஏனெனில், நாமெல்லோரும் அவருக்கே சொந்தம்.

## தேவனிலேமாத்திரம் சகோதரத்துவம்

காட்டுமிராண்டிகள் மத்தியிலும் ஓர் ஒற்றுமை இருக்கிறது. ஆனல், அது தூய அன்பால் ஆனதன்று; சுயநலத்தால் ஆனது; அழிந்துபோகும் இச்சையால் ஆனது; அழிவையே தனக்குள் அடக்கியது; அழியாத சகோதரத்துவமோ தூய அன்பால் ஆகிறது; அது தேவனுல மாத்திரம் ஆகிறது. அது சாதி, சமயம், நாடு என்று வேற்றுமைப்படுத்தாது. தேவனளவு பாரிருக்கிறது. தனவந்தர், வறியவர், முதலாளி, தொழிலாளி, மேலானவர், தாழ்த்தப்பட்டவர் என்று புறக்கணியாது. இன்னும் வறியவர், தொழிலாளி, தாழ்த்தப்பட்டவர் என்று வருத்தப்படுகிறவர்களுக்கு இரக்கத்தையும் அன்பையும் காட்டி அவர்களுக்கு ஆறுதலளிக்கிறதே தேவ அனபால் பிறக்கும் பிறர்சிநேகம். இவ்வாறு உருவாகிற மக்களே இறைமக்கள். இவர்களே மோட்சத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுபார்கள். இவர்களே மெய்யாகத் தூயஆவியையும் தண்ணீரையும் இரத்தத்தையும் பெற்றவர்கள். மற்றெல்லோரும் ஒரு காலம தேவ தண்டனைக்குப பாத்திரவாளிகள் ஆவார்கள். பயங்கரமான சம்பாவனையைப் பெற்று, சபிக்கப்பட்டவர்களே என்று அழைக்கப்படுவார்கள். எப்படி எல்லோரையும் ஆராதனைக்கு அழைக்கும் தேவாலயத்தின்கதவு விசாலமாகத் திறக்கப்பட்டிருக்கிறதோ அதேபோல் தேவ அன்பால் சீவிக்கும் நாம் எல்லோருக்கும் எங்கள் இருதயங்களை விசாலமாய் என்றும் திறந்துவைப்போம்.

## பலியானவருக்குப் பலியாகுவோம்

எங்களுக்காக யேசுபலியானர். அப்படிப் பலியானவருக்கு எப்படி நாம் பலியாகுவோம்? தமது இரத்தத்தால் நித்திய சீவியத்தை நமக்குத் தந்த யேசுவுக்கு நமது சுயநலத்தை அளித்துத் தேவநேசத்தையும், அத்தால பிறக்கும் பிறர்நேசத்தையும் வளர்ப்போம். இதையே தேவ அன்பர் வேண்டுகின்றார். இது தேவநேசத்தால் பிறக்கும் மனப்பூரிப்பையும் சமாதானத்தையும் அளிக்கும். விசேஷமாய் எங்களைச் சூழவுள்ள சமூகம்மட்டில் கிறிஸ்துவுக்குச சாட்சிகளாவோம் எங்கள்மனப்பான்மையையும்கிறிஸ்தவ சீவியமுறைகளையும் அவர்கள் கண்டு "இவன கிறிஸ்துவில் வசிக்கிறவன்; கிறிஸ்து இவனில் வசிக்கிறார்" என அறிவார்கள். இதுவே கிறிஸ்தவுக்குச் சாட்சியாகும் உன்னத வழியாம. சிலுவையில் புனித அருளப்பர் மூலம் தனது தாயாரை எங்களுக்குத் தந்த கிறிஸ்து அதே நேரம் அவவுடைய கிறிஸ்தவ மக்கள் அனைவரையும் எங்களுடைய விசேஷ கண்காணிப்புக்கும் கிறிஸ்துவ உதவிக்கும் தந்திருக்கிறார். சிலுவையடியிலே சகல நித்திய உரிமைகளைப்பெற்ற கிறிஸ்தவன் எப்படி அங்கே ஏற்றுக்கொண்ட கடமைகளை மறக்கக்கூடும். கடமையின்றி உரிமையில்லை. கிறிஸ்து எப்படித் தனது பரமபிதாவின் நித்திய பராமரிப்பையும் கண்காணிப்பையும் இவ்வுலக முப்பத்துமூன்று வருடங்களில சாதனை முறையில் செய்து சிலுவையில் கடைசியாய் எல்லாம் முற்றிற்று" என்றாரோ அதேபோல் கிறிஸ்து தலையாகவும் சகல கிறிஸ்தவர்கள் அவரின் ஞான உடலாயுமிருப்பதால் எல்லோரும அவரையே பின்பற்றவேண்டும்.

## இரட்டைப் பிள்ளைகளான குருப்பிரசாதிகள்

கனன் அல்பிறெட் குமிங், வண. றொடெறிக் குமிங்எனும் இரட்டைப்பிள்ளைகளான குருப்பிரசாதிகள் இருவர் சென்ற ஆனிமாதம 29 ஆம்தேதியன்று தங்கள் குருத்துவ 40 ஆம் ஆண்டுநிறைவு விழாவைக் கொண்டாடினார்கள். இவர்கள் இருவரும் ஒரேநாளில் பிறந்து, இற்றைக்கு 47வருடங்களின் முன்னர் லண்டன்நகர் வெஸ்ற்மினிஸ்றரிலுள்ள மேற்றிராசன குருமடத்தில்சேர்ந்து, ஒரேநாளில்— அதாவது 1928 ஆம் ஆண்டு ஆனிமாதம் 29 ஆம்தேதியன்று குருப்பட்டம் பெற்றுக்கொண்டார்கள். இவர்கள் 14 பிள்ளைகளைக்கொண்ட ஒரு குடும்பத்தில பிறந்தவர்கள். அப்பிள்ளைகளில குருத்துவபதவியை மேற்கொண்ட நான்கு சகோதரர்களில் இவர்கள் இருவர். இவர்களில் மூத்தவரான வண. றொபேட் குமிங்சுவாமியார் சென்ற வருடம் காலஞ்சென்றார். இளையவரான வண. லைசுன குமிங்சுவாமியார் சிவந்தராயிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### அன்புத் தம்பி - தங்கையருக்கு வணக்கம்!

அர்ச். கிளமென்ற் ஒவ்வொருநாளும் மாலை வேளைகளில் தமது ஊரைச்சுற்றி உலாவிவருவது வழக்கம். அவர் உலாவிவரும்பொழுது வழியிலே எதிர்வரும் எவருக்கும் ஏதோ சிலவார்த்தைகள் கூறித் தலைசாய்த்து வணக்கம் செலுத்துவார். சந்திக்கும் ஒருவன் இளைஞனாயிருந்தால் மூக்குப் பொடியை முதலில் அவரிடம் நீட்டிப் பின்பு கனிவுடன் அவருடன் பேசுவார்.

அன்று ஒருநாள் கடற்கரையோரமாய் அவர் உலாவி வரும்போது வாடியமுகத்தோடு ஒருவாலிபன் கற்பாறை ஒன்றின்மேல் உட்கார்ந்து கொண்டு ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கக்கண்டார். உடனே அர்ச். கிளமென்ற் அவனருகில்சென்று, முதலில் மூக்குப்பொடி போட்டுக்கொள் தம்பி என்றுகூறி அவனது துக்கத்தை விசாரித்தார்.

அந்த வாலிபனுக்கு நண்பர் ஒருவரும் இல்லை. அனுதாபம் தெரிவிப்போரும் இல்லை. விசனம் கூடியவனாய், தற்கொலை செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு அவ்விடம் வந்திருந்தான் என்பதையும் அறிந்துகொண்டார், "இன்று முதல் நான் உனது நண்பன்" என்று கூறிய இப்புனிதர், "கடவுளின் அன்பே உலகில் பெரியது; உலகமக்கள் எம்மை நேசிப்பதைவிட அவர் எண்ணிறந்த விதமாக நம்மை நேசித்திருக்கிறார்; மோட்சம் எமதுகதி; எல்லாம் தேவாதீனமாய்த்தான் நடைபெறுகின்றன" என்று இப்படியே அவ்வாலிபனைத் தேற்றினார். அவனும் மனம் மாறினான். தனது தற்கொலை எண்ணத்தைக் கைவிட்டான். அர்ச். கிளமென்ற் மட்டில் அன்பு பூண்டான்.

ஓர் அன்பான வார்த்தை, புன்சிரிப்பு, இந்தவாலிபனை மனந்திருப்பியது. ஒருவரும் தனக்கு ஆறுதல்தர இல்லையே என்று ஏங்கிய அவ்வாலிபனுக்கு "இதோ நான் இருக்கிறேன். இன்றுமுதல் நான் உனது நண்பன்" என்ற இப்புனிதருடைய வார்த்தைகள் எத்துணை ஆறுதலாய் இருந்தன. இதுபோல எமது வாழ்க்கையிலும் நாமும் எமது வார்த்தைகளினால் மற்றவர்களுக்கு ஆறுதல் கொடுக்கலாம். அன்பான ஒருவார்த்தை மற்றோரை மனந்திருப்பும். இது சமூகவாழ்க்கையில், எமது அன்றாடசீவியத்தில் அனுசரிக்கவேண்டிய ஒரு நற்குணம்.

— அண்ணா

## ஒரு நிமிஷக் கதை

கமலாபுரத்தை கமலசேகரன் என்னும் அரசன் ஆண்டுவந்தான். இவன் செம்மனத்தான்; தண்ணளியான்; செங்கோலன். தமிழ்மொழியில் பெரும் பற்றுக்கொண்டு புலவர்களை ஆதரித்து வந்தான். ஒருநாள் வறுமையால் வாடிய புலவர் ஒருவர் இவ்வரசன் சபைக்குவந்து அவனைச் செம்மொழிகளால் புகழ்ந்து பாடினார். அதைக்கேட்டு அடங்கொணா மகிழ்வு கொண்ட அரசன், ஒருதங்கத்தட்டில் அவர் குடும்ப சவரக்ஷணைக்கு, மங்களப் பொருள்களான வெற்றிலை, பாக்கு, மஞ்சள், சந்தனம் முதலியவைகளையும் வைத்து அவருக்கு நன்கொடையாக அளித்தான்.

தட்டிலுள்ள பொருள்களை எடுத்துக்கொண்டு, தட்டைத்திருப்பிக் கொடுத்துவிட வேண்டியது வழக்கமாயிருந்தும், இன்னலில் உழன்ற அப்புலவருக்கு அத்தட்டையும் தட்டிவிடவேண்டுமென்ற பேரவா உண்டானபடியால், 'நமது வாக்கு வன்மையால் அரசன் மறுக்காமலிருக்கும்படிசெய்து, அத்தட்டையும் பெறவேண்டும்' என மனதில் எண்ணி வேந்தனை நோக்கி: 'அரசே! சமூகத்திற்கு தட்டுண்டோ?' எனக்கேட்டார். இது சிலேடை வார்த்தையாய் 'கெடுதலுண்டோ?' 'என்ற பொருளையும் கொடுப்பதால் கெடுதலுண்டு' என்று பொருள்படும் 'தட்டுண்டு' என்னும் வார்த்தையை நாம் ஏன் ஒப்புக்கொள்ள வேண்டும். நமது தங்கத்தட்டுப் போனாலும் பரவாயில்லை; இவ் வார்த்தையை அவர் பக்கமே திருப்பிவிட வேண்டுமென்றுன்னி: 'புலவரே! வித்துவான்களுக்குத்தான் அடிக்கடி தட்டுவரும்; நமக்கு ஒருநாளும்தட்டுவராது' என்று கூறினார்.

இதைக் கேட்டதும் புலவர் அடங்கொணா மகிழ்வு கொண்டு, அரசனை நோக்கி: 'அண்ணலே! வித்துவான்களுக்கு அடிக்கடி தட்டுவருவது வழக்கமானால், இத்தட்டையும் நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்' என்றுகூறி அந்தத் தங்கத்தட்டை எடுத்துவைத்துக் கொண்டார். அரசன் தட்டுப் போனதைப் பெரிதாயெண்ணாமல், புலவரின் வாக்கு நயத்துக்காக அவரைப் புகழ்ந்து கொண்டாடினான். தட்டு என்பது ஒரு சிலேடைச் சொல். இது 'தாம்பாளம்,' 'குறைவு' என இருவகைப் பொருளையுந்தரும்.

### சிறுவர் சிந்தனைக்கு!

**நட்பு:**

நமக்கு நன்மைகிட்டும்போது மகிழ்ந்து தீமைவந்தபோது வருந்துபவன் நண்பன். நம்பகைவர்கள் அவனுக்கும் பகைவர்கள்; நம் நண்பர்கள் அவனுக்கும் நண்பர்கள்.

— அரிஸ்டாட்டில்

**சேவை:**

மற்றவர்களிடம் நீ அன்புசெலுத்துகிறாய் என்றால் அதைநீ எப்படிக்காட்ட வேண்டும்? அவர்களைப் புகழ்வதனால் அல்ல; அவர்களுக்குச் சேவைசெய்வதனால்.

— விவேகானந்தர்

**கடமை:**

தன் கடமை எதுவென்பதை உணர்ந்தவன் அறிவாளி; கடமையை எப்படிச் செய்யவேண்டும் என்பதை அறிந்தவன் திறமைசாலி; கடமையைச் செய்பவன் நல்லவன்.

— ஜெர்னான்

தொகுப்பு: இ. பேர்னாட்

## பொன்மலரிலிருந்து தெரிந்துகொள்வோம்

கிறிஸ்துநாதரின் போதனைகளையும் சாதனைகளையும் திரட்டிவைத்துள்ள பொன்மலரே சுவிசேஷம் ஆகும். இதில் தரப்பட்டுள்ள கிறிஸ்துவின் நற்செய்திகளை நாம் நன்கு அறிந்திருக்க வேண்டுமென சத்திய திருச்சபை விரும்புகிறது. வாசகர்கள் தங்களது சுவிசேஷ அறிவைப் பரீட்சிக்க இதோ ஒரு சந்தர்ப்பம். ஒரு கடதாசியும் பென்சிலும் எடுத்துக்கொள்ளுங்கள். இங்கு தரப்படும் வினாக்கட்கான விடைகளை குறித்துக்கொள்ளுங்கள். பின்னர் காவலனில் மற்றொரு பக்கத்தில் தரப்பட்டுள்ள விடைகளுடன் ஒப்பிட்டு புள்ளியிட்டுக்கொள்ளுங்கள்.

1. நடுத்தீர்வைநாளிலே எந்த அளவு கோலைக்கொண்டு நாம் தீர்வையிடப்படுவோமென சுவிசேஷகர் மத்தேயு கூறுகிறார்.

2. யூதாசினால் திருப்பிக்கொடுக்கப்பட்ட 30 வெள்ளிக்காசுகளைப் பிரதான குருக்கள் யாது செய்தனர்?

3. ஏரோதுவின் முன்பாக நடனமாடிய பெண்ணின் பெயர் யாது?

4. எத்தனை முறைகள் என் சகோதரனை மன்னித்தால் போதும், ஏழு தடவைகளா என்ற இராயப்பரின் வினவுக்கு கிறிஸ்துநாதரின் விடை யாது?

5. தனது புதல்வர்கட்கு பரலோகத்தில் மகத்தான ஆசனங்கள்கொடுக்க வேண்டுமென நமதாண்டவரைக் கேட்டுக்கொண்ட பெண் யார்?

6. விதைப்போனின் உவமையில் பாதையோரத்தில் விழுந்த விதைகட்கு நேர்ந்தது யாது?

7. கிறிஸ்துவின் சீடர்கள் ஏன் உபவாசம் இருப்பதில்லையென அவரிடம் கேட்டவர்கள் யார்?

8. திருமண விருந்தில் கல்யாண ஆடையின்றி வந்தவனுக்கு நடந்ததென்ன?

9. யார் மோட்சம் போவது ஊசியின் காதினூள் ஒட்டகம் நுழைவதைவிடக் கடினமாயிருக்கும் என யேசு கூறினார்.

10. கிறிஸ்துநாதரால் அழைக்கப்படும்போது இவர்கள் யாது செய்து கொண்டிருந்தனர்? அ. இராயப்பரும் அந்திரேயாவும். ஆ. யாகப்பரும், அருளப்பரும். இ. மத்தேயு.

சா. பெ.

(விடை வேறுபக்கம் பார்க்கவும்)

### தென்னையே!

(1)

உன்னை வைத்து நான் வளர்க்க
உண்மை அன்பினால்
என்னை வாழ வைக்க வந்த
இன்பத் தென்னையே!

(2)

ஓலை தந்து வீடு வேய
உதவி செய்கிறாய்
சோலையாக நின்றெனக்குச்
சுகம் அளிக்கிறாய்.

(3)

தமிழைப் போலும் நீரைவார்த்துத்
தாகந் தீர்க்கிறாய்
அமுதமூறும் காய்களீந்து
அன்னம் ஊட்டுறாய்.

(4)

வெட்டி யுன்னைக் கூறுபோட
விலை கொடுக்கிறாய்
மட்டிலாத நன்மைதந்து
மகிழ் வளிக்கிறாய்.

(5)

எண்ணிலாத பயனிறைந்தும்
ஈனக் கள்ளினால்
மண்ணிலுந்தன் பெயர் கெடுத்து
மானம் போக்கிறாய்.

எம்வி.

## கிறீஸ்துவும் கிறீஸ்தவனும்

(எஸ். கே. பத்திநாதன்)

கிறீஸ்து கிறீஸ்தவனை நேசிக்கிறாரா? அல்லது, கிறீஸ்தவன் கிறீஸ்துவை நேசிக்கிறானா? இதில் எது உண்மை? கிறீஸ்து நம்மை நேசிக்கிறார் என்பது கிறீஸ்துவின் பிறப்பு, வாழ்வு, போதனை, புதுமை, பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பவற்றால் கண்டறிந்த மறக்கமுடியாத உண்மை. ஆனால், கிறீஸ்தவன் கிறீஸ்துவை நேசிக்கிறானா? எப்படி நேசிக்கிறான் என்பதுதான் கேள்வி?

ஒருவன் கிறீஸ்துவ வாழ்க்கை வாழ்ந்தால அவன் கிறீஸ்துவை நேசிக்கிறான் என்று கூறலாம். அக்கிறீஸ்துவ வாழ்க்கைதான் என்னே? கிறீஸ்துவ வாழ்க்கை என்பது அவருடைய தூயஆவியானவர் வழியாகக் கிறீஸ்துவை நேசித்து, கிறீஸ்துவுடன் பிதாவை அறிந்து அவ்வொன்றிப்பினால் நம் சகோதரரையும் நேசிப்பதாம். அவ்வித ஒன்றிப்பே கிறீஸ்துவை நம் இதயத்தின் அடித்தளத்தில் வசிக்கச்செய்யும் உயிர் வாழ்க்கையாகும்.

நம் அன்பர்யேசு, தம் தேவஉயிரை நம்மோடு பகிர்ந்துகொள்ள விரும்பினார். விரும்புகிறார். அதாவது, பிதாவையும் நம்மையும் ஐக்கியப்படுத்தத் தாமே பிதாவை நேசித்தும், அச்சிநேகத்தின் பிறப்பாகிய தூயஆவியானவரைக்கொண்டு மனித ஆன்மாவையும் நேசித்து, தேவஉயிரை நம்மிடம் புகுத்தச் சித்தம் கொண்டார். இப்படியான தேவஉயிரை மனித இதயத்தில் மூட்டி எரியப்பண்ணத் தேவதிரவிய அனுமானங்களை ஏற்படுத்தினார். அதிலும் ஞானஸ்நானத்தின்மூலம் முத்திரையிடப்பட்ட ஆன்மாவை, தேவநற்கருணையெனும் அன்பின்கொடையால் இறைவனை தம்மோடு ஐக்கியப்படுத்தச் சித்தம்கொண்டார். அவர் விருப்புக்கிணங்கி, அவர் நம்மில் சீவிப்பதுபோல், நாமும் அவரில் சீவிக்க வேண்டும் என்பதையே அவர் விரும்புகிறார். அவரைச் சிநேகிப்பவன் அவரில் சீவிக்கிறான். அவரில் சீவிக்கிறவன் அவர் விரும்புவதைச் செய்யவும், அவரைத் திருப்திப்படுத்தவும் விரும்புவான். அவரது விருப்பம் என்ன?

சிநேகத்தால் தம்மோடு ஐக்கியமாகி பிறரையும் நேசிக்க வேண்டுமென்பதே. அதாவது பிறசிநேகக் கிரிகைகளைப் புரிவதாம். அத்துடன் நில்லாது தான் அறிந்த, தான் சிநேகித்த கிறீஸ்துவை மற்றவர்களும் அறியப்பண்ணுவதாம், இவ்வித செயல்புரிபவன் தேவநற்கருணையை அடிக்கடிபெற்று, கிறீஸ்துவைப்போல் ஆகவேண்டும். அதனால் தூயஆவியானவர் கடவுளின் பிரசன்னத்தையும், ஞானத்தையும், வல்லமையையும் நமக்குக்காட்டி, ஓர் அதிசய ஒளியால் நம்புத்தியைத் துலக்கி, பாவத்தை வெறுக்கப்பண்ணி, பரிசுத்தப்படுத்தி, மானிடநேசத்தைக் கடந்த ஒரு புதுவித அன்புணர்ச்சியை நம் உள்ளத்தின் அடித்தளத்தில் உதிக்கப் பண்ணுகிறார். இதையே நாம் தேவ சிநேக அக்கினி என்கிறோம். இவ்வொளி நம் இதய அடித்தளத்தில் சுடர்விட்டெரியத் தொடங்கினால் எவ்வித பாவமாகும் கிட்ட நெருங்காது ஓட்டமெடுக்கும். இப்பேர்ப்பட்ட சக்தியுடையவன் கிறீஸ்துவுக்காக எதையுமே செய்யத் தயாராய் இருப்பான். உயிரைமுதலாய் இழக்கத் தயங்கமாட்டான், உள்ளன்போடு தேவநற்கருணை பெறுவதால், கிறீஸ்துவோடு நேர்முகமாய் ஒன்றித்து, அவரின் அன்பின் தணலில் தகனிக்கப்பட்டு, அன்பின்

(மறுபக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னப்ப தந்தையின் 5-வதுவருட ஆட்சி

**கடந்த ஆனிமாதம் 21-ந்தேதி ஆறுவது சின்னப்ப பாப்பரசர் திருச்சபைக்குத் தலைவராக முடிசூடிய 5-வது ஆண்டு நிறைவைக் கண்டுகளித்தோம். இக்கட்டுரை 5-வது ஆண்டில் அவரது சாதனைகளை ஆராய்கின்றது.**

( சாமுவேல் பெனடிக்ற் )

சின்னப்பதந்தை அடுத்தபுரட்டாதியில் 71-வதுவயதை அடைவார். 75-வது வயதின்பின் மேற்றிராணிமார் இளைப்பாறலாம்என்ற விதியைக் கொண்டுவந்தவர் சின்னப்பர். தேக நிலைக் குறைபாடு காரணமாக அவரே இளைப்பாறப் போகிறார்என்ற வதந்திகள் சமீபகாலமாக அடிபட்டுக் கொண்டிருக்கின்றன. சுகத்தாழ்வான நிலையிலும்கூடச் சமாதானத்துக்காக அயராதுழைத்துவரும் நமது பரிசுத்ததந்தை கடந்தவருடத்தில் சாதித்தவைகளை நோக்குவோம்.

### இஸ்ரேயேல் யுத்தம் :

பாப்பரசர் தமது ஆளுகையின் ஐந்தாம் வருடத்தை ஆரம்பிக்கச் சற்று முன்னதாகவே இஸ்ரேயேல்-அரபுயுத்தம் ஒருமுடிவுக்கு வந்தது. யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கட்கு மருந்து, உணவு, உடை மற்றும் நிதிஉதவிகளும் பெருமளவில்தந்து இருபாலாரினதும் நல்மதிப்பைப் பெற்றார். கிறிஸ்தவர்களின் புனித தலங்கள் அகில உலக பொதுச்சொத்தாகப் பிரகடனப் படுத்தப்படல்வேண்டும்என்ற அவரதுகொள்கையைப் பலநாடுகள் ஆதரிக்கின்றன.

### இரு பிரதான நிகழ்ச்சிகள் :

ஆனி 26இல் 27கர்தினால்களைப் புதிதாக நியமித்தார். சில புதிய நாடுகளும் இதனால் தங்கட்கெனக் கர்தினால்களைப் பெற்றன. ஆடி 25இல் காத்திராப் பிரகாரமாகத் துருக்கிக்கு விஜயம் செய்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். இந்த இருநாட் தரிசனையின்போது எபேசஸ் நகரத்தில் அழிந்த நிலையிலிருக்கும் தேவதாயின் புராதன ஆலயத்தண்டைசென்று பிரார்த்தனை நடாத்தினார். இங்குதான் மூன்றாவது பொதுச்சங்கம் கூட்டப்பட்டது. பின்னர் கிரேக்க ஒதொடக்ஸ் திருச்சபையின் பிதாப்பிதாவான அத்தனகோராஸ் ஆண்டகையையும் சந்தித்தார். இது சரித்திரச்சிறப்புப்பெற்றதோர்நிகழ்ச்சி. இச்சந்திப்பு பின்னர் அத்தனகோராஸ் ஆண்டகை ஐப்பசிமாதத்தில் உரோமைக்குவந்து பாப்பிறையைச் சந்திக்க வழிவகுத்தது.

### உரோமன் கியூறியாவில் புரட்சி :

உரோமன் கியூறியாஎன்பது திருச்சபையைப் பாப்பரசரின் சார்பில் நிர்வகித்துவரும் ஒரு மந்திரிசபையாகும். இந்த நிர்வாகசபைக்குப் புரட்சிகரமான மாற்றங்கள் — அமைப்பிலும் நிர்வாகத்திலும் தேவையென வத்திக்கான் சங்கக் கூட்டங்களின்போதும் பலத்த கண்டனங்கள் எழுப்பப்பட்டன. கியூறியாவின் இலாகாக்களின் தலைவர்களாக அதிகமான இத்தாலியர்களே இருப்பதுபற்றியும், அவர்கள் பிற்போக்குவாதிகளாக விளங்குவதுபற்றியும் நீண்டநாட்களாகவே அதிருப்தி தெரிவிக்கப்பட்டு வந்துளது. சின்னப்பர் பல இலாகா தலைவர்களை நீக்கி, பிற தேச கர்தினால்கள் பலருக்கு அப்பதவிகளை வழங்கினார். கியூறியா நிர்வாகத்தில் புதிய புரட்சிகரமான மாறுதல்கள் செய்யப்பட்டன.

### சத்திரசிகிச்சை :

இரவுபகலாக இறைவன் பணியில் ஓய்வொழிச்சலின்றி உழைத்துவந்த பாப்பிறை சுகவீனமுற்றார். கத்தோலிக்கஉலகு வெகுகவலையோடு உரோமையை நோக்கியது. புரட்டாதிமாதத்தில் காஸ்தல் காண்டல்போ மாளிகையில் சுகவீனமுற்றிருந்த பாப்பரசரை மருத்துவநிபுணர்கள் உரோமைக்குக் கொணர்ந்தனர். தமக்கு நீண்டஓய்வும், கவனமான சிகிச்சையும் தேவையென அறிந்தபோதும் திருச்சபை அலுவல்கள் தம்மால் தடைபடுவதை அவர் விரும்பவில்லை. அவற்றை நடாத்தி முடித்தபின்னரே கார்த்திகை மாதத்தில் சத்திரசிகிச்சைக்கு உடன்பட்டார்.

### சினேட்டும் இல்லறத் தொண்டர்களும்:

புரட்டாதி 29இல்கூடிய அகிலஆயர் பிரதிநிதிகளின் சினேட் சங்கத்துக்கு நோயாளியாகவிருந்த பாப்பரசரே தலைமைதாங்கி நடாத்தினார். ஐப்பசியில் அனைத்துலக கத்தோலிக்க இல்லறத் தொண்டர்கள் மாநாடு சிறப்பாய் இயங்கவும் வழிவகுத்தார். இவையிரண்டும உலக கவனத்தை ஈர்த்தன. தம்மை ஜெருசலேமிலும், துருக்கியிலும் இருமுறைதரிசித்த பாப்பரசர் சின்னப்பரைக் கௌரவிக்கப் பிதாப்பிதாவான அத்தனகோராஸ் ஆண்டகை உரோமைசென்று பாப்பரசரின் விருந்தாளியாகச் சிலதினங்கள் தங்கினார்.

### சமாதானப்பணி :

திருச்சபையின் அலுவல்களினூடே சமாதானப்பணியையும் பாப்பு மறந்துவிடுவதில்லை. தம்மைத் தரிசிக்கவந்த உலக தலைவர்கட்கும் சிறப்பாக அமெரிக்க அதிபர் யோண்சனுக்கும் வியற்னாமிலும், மற்றும் நாடுகளிலும் அமைதி நிலவவேண்டுவதன் அவசியத்தை வற்புறுத்தியுள்ளார். தைமாதம் முதல் தேதியே சர்வதேச சமாதான தினமாகப் பிரகடனஞ்செய்து சமாதானத்துக்காகச் செபிக்கவேண்டியதின் அவசியத்தையும் வற்புறுத்தினார். மாட்டின் லூதர்கிங், றொபேட் பிரான்சிஸ் கென்னடி ஆகியோர் கொலைசெய்யப் பட்டகாலை இவ்வித அராஜகச் செயல்களை வன்மையாகக் கண்டித்து, முதலில் குரல் எழுப்பியவர் பாப்பரசரே.

### பிரார்த்திப்போம் :

ஆண்டில் முதிர்ச்சியும், ஆரோக்கியத்தில் குறைபாடும் ஏற்பட்டுவரும் சின்னப்பதந்தை கடந்த ஐந்துவருடங்களில் திருச்சபையின் வளர்ச்சிக்காக, அதன் புதுமைமிக்க மாறுதல்கட்காக, உலக அமைதிக்காக ஆற்றியவை அதிகம். இந்த நல்லதந்தை எம்மிடையே இன்னும் பலவருடகாலம் குன்றாவளமும், குறையா நலனும்பெற்று நற்சேவையாற்றுமாறு இறைவனை இறைஞ்சுவோமாக.

---

● இந்தியாவிலே மூன்றாவது கம்யூனிஸ்த கட்சியொன்று இப்பொழுது உருவாகியிருக்கிறது. இதுவரை அங்கே ருஷிய மஸ்கோசார்பும், சீனச்சார்புமுள்ள இருகட்சிகளே இருந்துவரலாயின. இப்போதைய மூன்றாவது கம்யூனிஸ்தகட்சி அகில இந்திய அடிப்படையிலே ஆந்திரா இராச்சியத்தில் ஆரம்பமாகியிருக்கிறது.

---

## கிறீஸ்துவும்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அடித்தளத்தையறிந்து அவரின் ஆழ்ந்த விருப்புக்களை அவ்வொளியால் கண்டுபிடிக்கிறான். அவரின் நோக்கம் விருப்புத்தான் என்ன ? மனிதர் யாவரையும் அவரைப்போலாக்கி, அவர் எவ்விதம் பிதாவோடும், பரிசுத்த ஆவியோடும் ஒன்றாயிருக்கிறாரோ அதுபோல யாவரும் அவரில் ஒன்றாயிருக்கச்செய்வதே அவரின் நோக்கமாகும். இந்நோக்கை நிறைவேற்ற (மனிதன்) கிறீஸ்தவன் கிறீஸ்துவின் போர்க் கவசங்களை அணிந்துகொண்டு தயாராய் இருக்க வேண்டியதே.

# திருச்சபையும் கத்தோலிக்கர் வாழ்வும்

(பி. சவரிமுத்து)

"திருச்சபை ஒருமறைபொருள். அதாவது கிறிஸ்துவில் பரிசுத்தஆவியின்மூலம் மக்களோடு இறைவன் கொண்டுள்ள உறவை வெளிக்காட்டி இறைவனோடுள்ள நெருங்கிய ஒன்றிப்பையும், மக்கள் குலமனைத்தின் ஒருமைப்பாட்டையும் குறிக்கும் ஓர் அடையாளமும் கருவியுமாக திருவருட்சாதனமாக விளங்குகிறது இத் திருச்சபை.

"தனிமனிதன் என்றமுறையில்அல்ல, ஆனால் ஒரு குழுவாகவே உலகம் மீட்படைய வேண்டுமென்பது இறைவனின் திட்டம். ஆகவே தம்மை விசுவாசத்தால் ஏற்றுக்கொண்டு புனித வாழ்வால் பணிபுரியும் ஒரு குழுவாகத் தம் மக்களை ஒன்று சேர்த்தார்"

"திருச்சபை" என்ற இரண்டாம் வத்திக்கான்சங்க கொள்கைத்திரட்டில் (பக். 34) மேற்கூறிய வசனங்களைக் காண்கிறோம்.

இறைவனின் திட்டத்தை நிறைவேற்றவே எமது இரட்சகர் இப்பூவுலகிற் தோன்றி, வாழ்ந்து, மடிந்து, மீண்டும் பரலோகத்துக்குச் சென்று, தமது பரமபிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார். திருச்சபை என்று பொதுவாக நாம் குறிப்பிடுவது சகலவிசுவாசிகளையுமே. "இறைவனின் மக்கள்" இவர்களின் கடமைதான் என்ன ? இவர்களுடைய வாழ்வு எப்படிப்பட்டதாய் இருக்கவேண்டும் ? இவ்வினாக்களுக்குகந்த விடைகளாகவே கத்தோலிக்கரின் வாழ்வும் இருக்கவேண்டுமென்பது வெளிப்படை.

விசுவாசத்தை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம்பெற்ற நாமெல்லவரும் பரமபிதாவின் பிள்ளைகளாக மாறுகிறோம். இப்பூவுலகில் வாழும் விசுவாசிகள் யாபேரும் அவரின் பிள்ளைகள். ஒருவர்க்கொருவர் ஞானச் சகோதரர்களாய் இருக்கிறார்கள்.

இறைவனின் பிள்ளைகளின் கடமை என்ன ? எமது மீட்பராகிய யேசுக் கிறிஸ்துநாதர் கூறியவாறு "பரமபிதாவின் திருச்சித்தத்தை நிறைவேற்றுவதே".

பரமபிதாவின் திருச்சித்தத்தைப் போதனையிலும் சாதனையிலும் நிறைவேற்றிய இரட்சகர் எங்களுக்கு அதை வெளிப்படுத்தியிருக்கிறார். "மக்களின் ஒளி"யாகிய கிறிஸ்துவின் அனல் எங்கள் எல்லோரிலும் கொழுந்து விட்டெரிய வேண்டும். நாங்கள் அவருடைய புனித வாழ்வுக்கு இவ்வுலகில் எடுத்துக் காட்டாக அமையவேண்டும். எமது புனித வாழ்வைக் காணும் பிறமதத்தினர் சகலரும் யேசுக்கிறிஸ்துநாதரின் போதனைகளைச் சாதனைமுறையில் எங்களில் காணவேண்டும். இதை அடிப்படையாகக் கொண்டே "நீங்கள் போய் எல்லாச் சாதியாருக்கும் போதியுங்கள்"என்று எம்மைப் பணித்திருக்கிறார். மேலும் "நீங்களே உலக மக்களின் வெளிச்சம், உப்பு, புளிக்காரம்" என்றெல்லாம்—உவமைகள் மூலம்—எங்கள் பணியை விளக்கியிருக்கிறார்.

தேவனையும் தேவனின் போதனைகளையும் அறியாது ஞானஇருளில் வாழும் கோடிக்கணக்கான மக்களுக்கு எங்கள் நாளாந்த வாழ்க்கை ஒரு வெளிச்சமாக இருக்கவேண்டும். இதையே மறைமுகமாக எங்களுக்குச் சுட்டிக்காட்டியிருக்கிறார் எமது திருமீட்பர். குருடன் குருடனுக்கு வழிகாட்ட முடியாதன்றோ !

நாங்கள் உலகத்தின் உப்பாயிருக்க வேண்டும். உப்புதான் உணவைப் பதப்படுத்துகிறது. உணவை உருசியுடையதாக்குகிறது. உணவைப் பாதுகாத்து வைக்கிறது. எனவே எங்கள் புனித வாழ்க்கை ஏனைய மக்களின் வாழ்க்கையைப் பதமடையப் பண்ணவேண்டும். பாவத்தில் வாழும் மக்களைப் புண்ணியபாதைக்குத் திருப்பவேண்டும். அர்த்தமற்ற அனுதின செயல்களை அன்பின் செயல்களாக—இறைவனின் தொண்டாக—நாம் எண்ணி வாழவேண்டும். அப்போது உண்மையாகவே எங்கள் வாழ்க்கை ஏனையோருடைய வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தும். அல்லாவிடில் "உப்புச்சாரமற்றுவிட்டால் அதால் என்னபயன் ஏற்படுகிறது?" என்று எமதுஆண்டவர் தமது அப்போஸ்தலர்களுக்குக் கூறியவாறு எமது வாழ்க்கையும் (எமக்கும் பிறர்க்கும்)பயனற்றதாகிவிடும்.

மேலும் எங்கள் "சமய—சமூக" வாழ்க்கை புளிக்காரம்போல் இருக்க வேண்டும். எம்மைச்சுற்றி வாழ்வோர்—எமது மதத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலென்ன வேறுமதத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலென்ன—எமது புனித வாழ்வைப் பார்த்து உண்மையாகவே மனமாற்றம் அடைவர். இவர்கள் காலக்கிரமத்தில் கிறிஸ்துவின் போதனைகளை அறிந்து அவற்றைப்பின்பற்ற உந்தப்படுவர். அதன் மூலம் இரட்சணியத்தையும் பெற்றுக் கொள்வர். எவ்வாறு மனிதஉடலில் பற்பல உறுப்புக்கள் இருக்கின்றனவோ அதுபோலவே திருச்சபையிலும் பலஉறுப்பினர் இருக்கின்றனர். இவர்கள் எல்லோரும், குருக்களாயிருந்தாலென்ன? துறவிகளாயிருந்தாலென்ன? கன்னியாஸ்திரிகளாயிருந்தாலென்ன? பொதுநிலையினராயிருந்தாலென்ன? தங்கள் மறைபரப்புப் பணியில் எந்நேரமும் பங்கெடுத்துக் கொண்டே வாழ்கின்றனர். எவ்வாறு ஒருதேன் கூட்டில் வாழும் தேனீக்கள் யாவும் தேன்கூட்டைக்கட்டிப் பெருப்பிக்கவும், தேன்வதை, மாவதை, புழுவதை ஆகியனவற்றை விருத்திசெய்யவும் அயராது உழைத்து வருகின்றனவோ அவ்விதமே திருச்சபையில் அங்கத்துவம் வகிக்கும் சகலரும் சகல மக்களின் ஈடேற்றத்துக்காக உழைத்து வர வேண்டிய கடமைபூண்டவர்களாயிருக்கின்றனர்.

எனவே, ஒரு குரவர், கொழும்பு மாகாணச்சங்கத்தில் விடுத்தவினாவை இங்குகூறுதல் பயனுடைத்து. "திருச்சபை (அதிகாரிகள்) எனக்கு என்ன செய்திருக்கிறது ?"என்ற கேள்வியை நாம் கேட்காது "திருச்சபையின் விருத்திக்கு நான் தனிப்பட்டமுறையில், இல்லை, வேறு பொதுநிலையினருடன் சேர்ந்து, என்ன செய்திருக்கிறேன் ?" என்று கேட்பது மிகவும் பிரயோசனமாயிருக்கும். இறைவன் எங்கள் ஒவ்வொருவருக்கும் பலவித திறமைகளைத் தந்து எங்களை ஏதோ ஓர் அந்தஸ்தில் வாழவழிவகுத்திருக்கிறார். இத்திறமைகளுக்கேற்ப நாம் எமது விசேஷ அந்தஸ்திலும், எமது நாளாந்த வாழ்க்கையிலும் ஒருபுனித வாழ்வு வாழ்ந்து வருகிறோமா ? நாங்கள் எம்மைச்சுற்றிவாழும் மக்களுக்கு ஒரு வெளிச்சமாக விளங்குகிறோமா? எம்மைச்சூழ்ந்து காட்சியளிக்கும் பாவச்செயல்களுக்கு நாங்கள் உப்புப் போன்றநிலையில் வாழ்ந்து அவற்றைப் புனிதப்படுத்துகிறோமா ? தின்மைகளை நன்மைகளாக மாற்றுகிறோமா ? எம் சமூகத்தில் நாம் புளிக்காரம்போன்று காட்சியளித்து எமது சமூகத்தில் சந்தோஷமும் சமாதானமும் ஏற்படுத்துகிறோமா ? இவற்றையே எம்மிடம் திருச்சபைவேண்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவுப்பகுதிச் சற்பிரசாத சமாகமச் செயற்குழு வெளியீடு—4

# அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்

யேசு கூறியவற்றை அவர் கருத்துப்படி அங்கிருந்தவர்கள் விளங்கிக் கொண்டார்கள். அவருடைய ஊன் அவர்கள் புசிக்க வேண்டிய சிவிய அப்பம்! இதில் விளக்கக் குறைவு எதுவுமில்லை. அவர்கள் சாதாரண கலிலேயர். தூர்த்து தருவது அவர்களுடைய நடைமுறைக்குப் புறம்பானது என்றெண்ணியிருப்பது அவர்கள் யேசு கூறியவைகளை ஏற்று விசுவசிப்பார்களா? என்ற வினவிற்கு விடை. இதில் மனிதனுடைய சுயாதீனத்தைப் பாதிக்கும் விதத்தில் எதையும் செய்யமாட்டார். ஆனால், தாம் கூறிவந்த உண்மையை அதிகாரத்தோடு அழுத்தந்திருத்தமாகக் கூறிமுடிப்பார். யேசு அவர்களை நோக்கிச் சொன்னதாவது: "உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: மனுமகனின ஊனை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய உங்களுக்குள் உயிர் இராது. என் ஊனைத்தின்று என் இரத்தத்தைக் குடிப்பவன முடிவில்லா வாழ்வைக் கண்டுள்ளான். நானும் அவனைக் கடைசி நாளில் உயிர்ப்பிப்பேன். என் ஊன் மெய்யான உணவு. என் இரத்தம் மெய்யான பானம. என் ஊனைத்தின்று என் இரத்தத்தைக் குடிப்பவன என்னில் நிலைத்திருக்கிருன். நானும் அவனில் நிலைத்திருக்கிறேன. உயிருள்ள தந்தை என்னை அனுப்பினுர். நானும் அவரால் வாழ்கிறேன. அதுபோல என்னைத் தினபவனும் என்ளுல் வாழ்வான். வானினின்று இறங்கிவந்த அப்பம் இதுவே. இது நம்முன்னோர் உண்ட உணவு போல் அன்று. அவர்கள் அதை உண்டார்கள, ஆயினும் இறந்தார்கள். இவ்வப்பத்தைத் தினபவனே என்றுமே வாழ்வான" என்ருர்.

அனுபவவாயிலாகக் கண்டறிந்தவற்றைத்தான மனிதர் ஏற்றுக்கொள்ள உடன்படுவார்கள். நடைமுறைகளில் வேரூன்றியிருந்த கலிலேயர் இதை ஏற்றுக்கொள்வார்களா? அதுதான் இல்லை. அவருடைய சீடருள் பலர் இதைக்கேட்டு. "இந்தப்பேச்சு மிதமிஞ்சிப்போகிறது; யார் இதைக் கேட்பார்கள்?" என்றனர். யேசு தமுடைய பேச்சிலிருந்து பின்வாங்கவில்லை. அவர் உயிருடன் இருக்கும் போதே அவரை விசுவசியாதவர்கள் அவர் சென்ற பிற்பாடு எதை விசுவசிக்கப்போகிருர்கள். 'இதைப்பற்றித் தம்சீடர் முணுமுணுப்பதை யேசு உணர்ந்துகொண்டு, 'இது உங்களுக்கு இடறலாக உள்ளதோ?' இதற்கே இப்படியெனருல், மனுமகன முன்னர் இருந்த இடத்திற்கு ஏறிச்செல்வதை நீங்கள் கண்டாலோ. உயிர் அளிப்பது ஆவியே! ஊனே ஒன்றுக்கும் உதவாது. நான சொனன சொற்கள் உங்களுக்கு ஆவியும உயிருமாகும. ஆனுல், விசுவசியாதவர் சிலர் உங்களிடையே இருக்கின்றனர்." என்று அவர்களுக்குச் சொன்னுர். ஏனெனில விசுவசியாதவர் யார், தமமைக் காட்டிக் கொடுப்பவன யார், என்று யேசு தொடக்கத்திலிருந்தே அறிந்திருந்தார். மேலும இதன் பொருட்டே, 'என் தந்தை அருள் கூர்ந்தாலொழிய எவனும் என்னிடம் வர இயலாது என நான் உங்களுக்குச் சொன்னேன்' என்ருர். யேசுவைக் கேட்டுக்கொண்டு நின்றவர்களுக்கு, அவரவர் தெரிந்துகொண்ட வழியே செலலும சமயம் வந்துவிட்டது. யேசு கூறுவதை ஏற்றுக்கொண்டால, அது அவர்களை எங்கே கொண்டு போய் விடுமோ? ஆழம் தெரியாமல் அவர்கள் கால் வைக்கமாட்டார்கள்.

இதற்கு மேலும் அங்கு கூடியிருந்தவர்களுக்கு அங்கு நிற்பது உகந்ததாய்த் தெரியவில்லை. ஒருவர்பின் ஒருவராகவும் சிறு சிறு குழுக்களாகவும் அவர்கள் கலையத் தொடங்கினுர்கள். யேசு இதைச் சகித்துக் கொண்டு மனவிதானத்தோடு அவர்கள் கலைவதைப் பார்த்துக்கொண்டு நின்ருர். உண்மைக்கும் புறம்பான வழி அவருடைய இயற்கைக்கு முற்றும் மாருனது. இருந்தும் அவருடைய இருதயம் மனித இருதயம அல்லவா? தாம் தெரிந்துகொணட சீடர்களைத்தவிர மற்றெல்லோரும போய்விட்டார்கள். அவருடைய பன்னிருவர் அவர் கூறியவற்றைப்பற்றி என்ன அபிப்பிராயப்படுகிருர்கள்? அவர்களும் அவரை மறுதலிப்பார்களா? அல்லது எல்லோரும் அறிய அவரை அறிக்கையிடுவார்களா? அவர் அவர்களை நோக்கி "நீங்களும்போய் விட நினைக்கிறீர்களா?" என்ருர்.

யேசுவின பரிவான இக்கேள்வி, சீமோன் இராயப்பருக்கு அவருடைய இருதயத்தைக் குத்தித் துளைத்தது போல் இருந்தது. யேசு கூறியதன அர்த்தம் அவருக்குத் தெளிவாக இலலைத்தான். ஆனுல், அவர் யேசுவில் விசுவாசங் கொண்டிருக்கிருர். தன முழு இருதயத்தோடும் யேசுவை நேசிக்கிருர். இதற்குமுன் அவர் யேசு கூறக் கேட்டபல, அவருக்குத் தெளிவாய் இருக்கவிலலை. ஆனுல் காளாவட்டத்தில் அவற்றில் அநேகமானவை அவருக்குப் புலனுயின. அதேபோல் இன்று கூறப்பட்ட வார்த்தைகளும் புலனுகும் காலம்வரும். வருவது வரட்டும. இராயப்பர் யேசுவுக்கு ஆறுதலாயிருப்பார். அவரோடு இன்னும் பதினெருவர் நிற்கிருர்கள். அந்தமட்டில் அவர்களும் யேசுவில் விசுவாசம கொணடுள்ளவர்கள் தானே. அவர்கள் சார்பிலும் இராயப்பர் பதில் கூறுவார். அவர் கூறவிருக்கும் பதிலின் மகத்துவத்தை அவர் உணர்ந்திருப்பாரோ என்னவோ! "ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? முடிவில்லாவாழ்வு தரும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன. நீரே கடவுளின் பரிசுத்தர். இதை நாங்கள் விசுவசிக்கிறோம்; இதை நாங்கள் அறிவோம்' என்று மறுமொழி கூறினுர்.

இது எவ்வளவு மனப்பூர்வமான அறிக்கை. யேசுவுக்கு பெரும ஆறுதலாய் இருந்தது. இராயப்பர் தம் மோடொத்த பதினெருவர் சார்பிலும் பகிலளித்தாலும் அவர்களுடைய தீர்மானங்களை அவர் தனித்தனியாய் அறிந்துகொள்ளவில்லை. இலௌகீக காரியங்களில் கண்ணுபிருந்தவனும் ஒருவன் அவர்கள் மத்தியில் இருந்தான. யேசு இதை அறிந்திருந்தார். அதை இப்பொழுதே அவர்களுக்குச் சொல்லிவைப்பது நல்லது. 'யேசு அவர்களை நோக்கி: பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்து கொண்டேன் அல்லவா? ஆயினும் உங்களில் ஒருவன் பேய்" என்ருர். அவர் சொன்னது சீமோன் இஸ்காரியோத்தின் மகனுகிய யூதாசைப்பற்றியே. ஏனெனில் பன்னிருவரில் ஒருவனுகிய அவன் அவரைக்காட்டிக் கொடுக்கவிருந்தான். யேசு தேவன என்று அறிந்தும அவரை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக அவரை மறுதலிப்பவர்களின் முன்னேடியாக யூதாஸ் காலாகாலத்திற்கும் அறியப் படுவான் (வளரும்)

"மரியாளின் திருக்கரத்தின் வழியாக அன்றி வேறு முறையில் நமக்கு எதுவும் கிடைக்கக்கூடாது என்பது இறைவன் திருவுளம்."
— புனித பெர்னார்து

வெளிவந்துவிட்டது!
விற்பனையாகின்றது!

## நமது வழித்தொடர்ச்சி
4-ம் பாகம்
கிறிஸ்துநாதர் வழிநடத்துகிருர்

பிரதி விலை: ரூ. 2-00

கிடைக்குமிடம்:
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

✝

திருமதி சவிராசி மாக்
அமலனடி சேர்ந்த
## 9-ம் வருட
## மரண ஞாபகம்

"வருடங்கள் ஒன்பதாண்டு
மறைந்த போதும்
தாயே உன் முகம் மறந்த
நாளே இல்லை
பேசுகின்ற மதுரமொழி
சிரிப்புத் தோற்றம்
அன்னநடை நெஞ்சினிலே
எரியுதம்மா
அன்புடனே எமையணைத்த
அரியதாயே
உம் கருணையை எண்ணி எண்ணி
அழுது நொந்தோம்"

என்றும் எங்கள் மனதைவிட்டு மறவாத திருமதி சவிராசி மாக் இம்மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலக வாழ்வெய்திய 9-ம்வருடம் நிகழும் 22-7-68-ல் பூர்த்தியாகிறது. அன்று நவாலி, சம்பேதுருவானவர் தேவாலயத்தில் துக்கப் பாடற்பூசை வைக்கப்படும். இதைக் கண்ணுறும், வண. குருமார், சந்நியாசர், கன்னியர், அன்பர்களை இரக்கமுள்ள தேவன் இவருக்கு நித்திய இளைப்பாற்றியை அருளுமாறு மன்ருடும்படி விநயமாக வேண்டுகின்ருேம்.

பிரிவால் துயருறும் பிள்ளைகள்: ரேசமுத்து, பேதுருப்பிள்ளை, ஞானப்பு குருசுமுத்து, அருளம்மா மாக், சங். சிஸ். மேரி காமலிடா, ஏ. சி.

பேரப்பிள்ளைகள்: சங் சிஸ். அனல்லா, நேசம் பூதத்தம்பி, மேரிதிரேஸ், யேசுதாஸ்

நவாலி, 104/68.

✝

## 30-வது நாள்
## ஞாபகார்த்தம்

எனது நேச மனைவி மேரி மார்கிறற் பொன்னுத்துரை பரலோகபிராப்தியான 30-ம் தினம் 27-7-68-ல் பூர்த்தியாகிறபடியால் அத்தினத்தில் அவ்வாத்தும சாந்திக்காக நீர்கொழும்பு அர்ச். மரியாயின் தேவாலயத்தில் சனிக்கிழமை காலை 6-15-க்கு துக்கப்பாடற்பூசை நடைபெறும்.

இதனைக் கண்ணுறும் சங். குருக்கள், கன்னியர்கள், விசுவாசிகள் யாவரும் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

46, சன்மேரிஸ் வீதி,
நீர்கொழும்பு.
105/63.

உடையார்
எக்ஸ். பொன்னுத்துரை

## சூழற்கல்விப் பொருட்காட்சி
(19.7-68 — 20.7-68)

யாழ். சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் ஆடிமாதம 19ஆம், 20ஆம் தேதிகளில சூழற்கல்விப் பொருட்காட்சியொன்று நடைபெறும். அக்காட்சி வடமாநில வித்தியாதிபதி உயர்திரு. எஸ். தணிகாசலம் அவர்களால் 19-7-68இல் திறந்துவைக்கப்படும். அத்தோடு "அர்த்த சாமம்," "பின் கதவு" என்னும் இருநாடகங்களும் அரங்கேற்றப்படும். பொருட்காட்சி காலை 9மணிமுதல் மாலை 5மணிவரை காட்சிக்குத் திறந்துவைக்கப்படும். காட்சி இலவசம். நாடகம் மாலை 6-30 மணிக்கு ஆரம்பமாகும்.

✝

## 1-ம்வருட மரண ஞாபகம்

இறப்பு: 16-7-68.

சீவியத்தில்நேசித்தோம்; மரணத்தில் மறவோம். மண்ணில் மறைந்தாலும் எங்கள் மனக்கண்முன் மறையாதிருக்கும் என் அருமைப் பத்தாவும் எங்கள் தகப்பனும், என் சகோதரரும் எங்கள் பெரிய தகப்பனும் எங்கள் அப்பாவுமான டி. எம். சந்தியாப்பிள்ளை அவர்கள் இறைவனடிசேர்ந்த முதல்வருடம் 16-7-68-இல் பூர்த்தியாவதால் இதைக்கண்ணுறும் சகலரும் இவ்வான்ம இளைப்பாற்றிக்காக மன்ருடும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

மனைவி: எஸ். அந்தோனியாப்பிள்ளை

குமாரர்: எஸ். எக்ஸ். ஞானசேகரம், எஸ். எம். கிறிஸ்ரி.

குமாரத்திகள்: திரேசா, வரப்பிரகாசம், பிறிட்ஜெற், இராஜசூரியர், ஜொய்ஸ் சந்தியாப்பிள்ளை.


சகோதரர்: டி. எம். அன்ரனிப்பிள்ளை

பேரப்பிள்ளைகள்.
10/368.

● யுத்தம் நிகழ்ந்துகொண்டிருக்கும் வியெற்னம்நாட்டிலே யுத்தத்தால் கஷ்டமுற்று வருந்தும்மக்களின் நலனுக்காகப் பயன்படுத்துமாறு அங்குள்ள மேற்றிராணிமாருக்குப் பாப்பரசர் அனுப்பிவைத்த முதலாவது நன்கொடையை உபகரித்த வியெற்னுமின் அப்போஸ்தலிக்க ஸ்தானுபதியாகிய பால்மாஸ் அதிமேற்றிராணியார் அதே நோக்கமாக அவரின் இரண்டாவது நன்கொடையை இப்போது அதன் ஜனுதிபதி தியூவிடம் அளித்திருக்கின்ருர். இரண்டிலும் பாப்பரசர் வழங்கிய மொத்தப்பணம 16,600 பவுனுகும்.

● தமது ஒன்பதாம்வயதில் அமெரிக்காவிலே ரெக்சாஸ்நகர சிகையலங்காரக் கடைஒன்றில் சப்பாத்துத் துடைக்கும்வேலை செய்தவரான அமெரிக்க ஜனுதிபதி லின்டன் ஜோன்சனின் படத்தைப் பாகிஸ்தானிலுள்ள சிகையலங்காரத் தொழிலாளர் தங்கள்கடைகளிலே தொங்கவிட ஆரம்பித்துள்ளார்கள். தொழிலின்மேன்மையைக் காட்டுவதற்காகவே அவர்களின் சம்மேளனம் இந்நடவடிக்கையை எடுத்திருக்கிறது.

உங்கள் கடிகாரங்களில்
எவ்வித பிழைகள்
ஏற்படினும்
எம்மிடம் காணபியுங்கள்.



கெனடி உவாச் வேக்ஸ்
85, பிரதானவிதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

### உபசபாநாயகர் கூறுகின்றார்

" தமிழ்ப்பேசும் மக்களின் பிரச்சினைகளைத்தீர்க்கத் தமிழ்க்கட்சிகள் ஒன்றுபடவேண்டும்; கட்சிகள் ஒன்றுபட்டால மக்கள் தாமாகவே ஒன்றுபடுவார்கள்; கட்சிகள் ஒன்றுபடத் தேவையில்லை, மக்கள் ஒன்றுபட்டால் போதுமென்று சிலர்கூறுவதில் அர்த்தமில்லை; கட்சிகளுக்கிடையிலே ஒற்றுமை ஏற்பட்டால தமிழர் பிரச்சினையைத்தீர்க்க வழி பிறக்கும்; தமிழ் இனத்திற்கு இது ஒரு சோதனைகாலம்; அதனால் தமிழர் விழிப்புடன் இருக்க வேண்டியகாலம் இதுவாகும்" என்று உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி. யுமான திரு எம். சிவசிதம்பரம் அவர்கள் காங்கேசன்துறையில் தமக்கு அருளப்பட்ட வரவேற்பு ஒன்றில் பேசியிருக்கின்றார்.

### மீனவர் அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணமாவட்ட மீனவர்களுக்கு அறிமுக அடையாள அட்டைகள் வழங்கும்வேலை ஆரம்பமாகி விட்டதென்று குடியேற்ற-வெளியேற்றப் பகுதிக் கமிஷனர் அறிவித்திருக்கின்றார். மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு இந்த அடையாள அட்டைகள் வழங்கும்வேலை ஏற்கனவே பூர்த்தியாகி விட்டதென்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

### கூடுதலான நெல்கொள்வனவு

சென்ற ஆனிமாத இறுதிவரையிலே உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் இவ்வருடம் 1கோடியே 11லட்சத்துத 99 ஆயிரத்து 175புசல்நெல்லை விவசாயப்பகுதி கொள்வனவு செய்திருக்கிறது. இதேகாலத்தில் சென்றவருடம் கொள்வனவு செய்யப்பட்டநெல்லிலும் இது 25லட்சம்புசல் கூடுதலானது.

### யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

ஆண்டிலே 2-வதுமுறையாக நடந்தேறும் யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு வருகிற ஆவணிமாதம் 9ஆம்தேதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண நகரமண்டபத்தில் ஆரம்பமாகவிருக்கிறது.

### ராக்ஸிக்காரர்களுக்கு எச்சரிக்கை

யாழ்நகரிலே மீற்றர் இல்லாது நடமாடும் ராக்ஸிகள் பொலிசாரால வழங்கப்பட்ட கட்டணவிளம்பரத்தை வைக்கத் தவறுமிடத்து அவற்றின் சொந்தக்காரர்மீது வழக்குத் தொடரப்படுமென்று வடபகுதிப் பொலிஸ்தலைவர் அறிவித்திருக்கின்றார்.

### பஸ் சீசன் திக்கெற்

மாணவர், மாணவிகளுக்குப் பாடசாலைகள்மூலம் பஸ்சீசன் திக்கற்றுகள் வழங்கப் போக்குவரத்துச்சபை தீர்மானித்திருக்கிறது பாடசாலைகளின் அதிபர்கள்மூலம் சீசன் திக்கற்றுகள்தேவைப்படும்மாணவர், மாணவிகளின் விபரங்களையும், கட்டணத்தையும் பெற்றுக்கொண்டு அவைகளை நேரே பாடசாலைகளுக்கு வழங்குமாறு சகலடிப்போக்களின் தலைவர்களுக்கும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

### வீடமைப்புத் திட்டங்கள்

விடத்தல்தீவு, வங்காலைக் கிராமங்களில் இருவீடமைப்புத் திட்டங்களை நிறைவேற்றிவைக்கும் முயற்சியில் மீன்பிடிபகுதி இப்பொழுது ஈடுபட்டிருக்கிறது. தற்போது விடத்தல்தீவில் கட்டப்பட்டுவரும் வீடமைப்புத் திட்டத்தில் 25வீடுகள் அமைக்கப்பட்டு மீனவர் குடும்பங்களுக்கும், இதேபோன்று வங்காலையில் கட்டப்படும் 25வீடுகள் அங்குள்ள மீனவர் குடும்பங்களுக்கும் வழங்கப்படும்.

### பாடசாலையில் சேர்க்க ஏற்பாடு

அடுத்துவரும் 1969ஆம் ஆண்டு பாடசாலைகளில முதலாமவகுப்பில தங்கள் பிள்ளைகளைச் சேர்க்க விரும்பும் பெற்றோர் இம்மாதம் 31ஆம தேதிக்கு முன் தமக்கு அருகாமையிலுள்ள பாடசாலை அதிபருக்கு விணணப்பம் செய்ய வேண்டும். சேர்க்கப்படும் பிள்ளைகளின் குறைந்தவயது 1969 ஆம் ஆண்டு தை மாதம 31 ஆம்தேதி ஐந்துவயதுடையவர்களாய் இருக்கவேண்டும்.

### உலகம் சுற்றிவரும் மாணவர்

ஆஸ்திரேலியாவிலே சிட்னிநகரிலுள்ள உயர்தரகல்லூரியொன்றில் தங்கள்கல்வியை முடித்துக்கொண்டு உலகத்தைக் கால்நடையாகச் சுற்றிவருமாறு இற்றைக்கு ஒன்பதுமாதங்களின் முன் அங்கிருந்து புறப்பட்ட ஜெறுல்ட் என்றமாணவனும், லூசி என்ற மாணவியும் இதுவரை தாய்லாந்து, கமபோடியா, இந்தோனீஷியாஉட்படப் பல்வேறு நாடுகளையும்பார்த்துவிட்டுத் தற்போது இலங்கைவந்து சேர்ந்துள்ளனர். இங்கே இருவாரங்களைக் கழித்தபின் இவர்கள் ஐரோப்பாவுக்குச் செலவிருக்கின்றனர். தங்கள் பிரயாணம் 1970ஆம் ஆண்டில் முடிவடையலாமென இவர்கள் நம்புகின்றனர். அதன்மேல் தங்கள் உலகசுற்றுப்பிரயாண அனுபவத்தையிட்டுப் புத்தகம் ஒன்று எழுத முடிவுசெய்திருக்கின்றனர்.

### 1970ஆம் ஆண்டுவரை

"இந்த அரசாங்கம் விழுந்துவிடுமென்று எமது அரசியல் விரோதிகள் சொல்லிச்சொல்லி அதன் வீழ்ச்சியை எதிர்பார்த்திருந்தனர்; அவர்கள் இன்னும் அதேநம்பிக்கையுடன் இருக்கின்றனர்; ஆனால், அவர்கள் எதிர்பார்க்கிறபடி கருமம நடைபெறாது; 1970ஆம் ஆண்டுவரை — அதாவது அதன்பதவிகாலம் முடிகிறவரை நாம்பதவியில் இருந்தேதீருவோம்" என்று கைத்தொழில்மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன இரத்தினபுரியில் நடைபெற்ற மகாநாடு ஒன்றில் கூறியிருக்கின்றார்.

### அல்லைப்பிட்டிக் கிராமசபை

இதுகாலவரை அல்லைப்பிட்டிக்கிராமசபையுடன் இணைந்திருந்த மண்டைதீவுப்பகுதி ஒரு தனிக்கிராமசபையாக வகுக்கப்பட்டுள்ளது. அல்லைப்பிட்டிக் கிராமசபை இனிமேல் ஐந்துவட்டாரங்களைமட்டும் கொண்டதாயிருக்கும்.

### புதிய அரசியற்கட்சி

சமீபத்திலே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட தம்பதேனியா எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயக்கா "சிங்கள மகாஜன கட்சி" எனும் நாமத்துடன் புதிய அரசியற்கட்சிஒன்றை அமைத்திருக்கின்றார். சர்வாதிகாரத்துக்கு எதிரான ஜனநாயகத்தை உள்ளடக்கிய சோஷலிஸ அரசாங்கம்ஒன்றை அமைப்பது, ஒற்றையாட்சி முறையைப் பாதுகாப்பது, 'சிலோன்' என்றபெயரைச் 'சிங்களே' என மாற்றுவதுபோன்ற அநேக நோக்கங்களை இக்கட்சி கொண்டதாயிருக்கும்.

### தேர்தலும் அபேட்சகர்களும்

யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தலுக்கு இன்னும் ஐந்துமாதங்கள் இருந்தபோதிலும் அதில்போட்டியிட விரும்பும் அபேட்சகர்கள் இப்போதே வெளிகொண்டு விளம்பரஞ்செய்யவும், துண்டுப்பிரசுரங்கள் விடுக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள் போட்டியிடும் அபேட்சகர்களைப் பொறுக்கெடுப்பதிலே தமிழ்க்காங்கிரஸும், தமிழரசுக்கட்சியும் ஈடுபட்டுவருகின்றன.

## புதைக்கப்பட்ட பொக்கிஷம்

பெல்ஜியதேச புறூஜெஸ்நகரம் விலைமதிக்கரிய திருப்பண்டமொன்றைத் தன்னகத்தே கொண்டிருப்பதையிட்டு என்றும் பெருமைபாராட்டுகிறது அதுதான் கல்வாரிமலையிலே அரிமத்தியாவின் சூசையப்பராலும், நிக்கோதேமுஸாலும சேகரிக்கப்பட்ட இரட்சகரின் திருஇரத்தமாகும். இது இரத்தினாபரணங்களால அலங்கரிக்கப் பெற்றுள்ள சிமிழ்ஒன்றிலே அங்குள்ள மகாலய திருசேத்திரத்தில் பூசிதமாக வைத்துக் காப்பாற்றப்பட்டு வருகிறது.

முதலாவது உலகயுத்தத்தின்போது பெல்ஜியத்தின்மீது படையெடுத்து மின்னல்வேகத்தில் அதனை அடிப்படுத்திய ஜேர்மனியர்கள் இந்தச்சிமிழைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தார்கள். அதனால் இந்தமதிக்கரிய தங்கள் பொக்கிஷத்தின்கதி என்னவாகுமோவென்று பெல்ஜியமக்கள் பயந்தார்கள். அவ்வாறாக ஒருநாள் இரவு அது காணாமலபோய்விட்டது. அது எங்கே போயிற்றென்பதைப் புறூஜெஸ்நகர் வாசிகளில் இருமனிதர் மட்டுமே அறிந்திருந்தனர்.

இந்தஇரகசியம் நன்குகாப்பாற்றப்பட்டமையால் ஜேர்மனியர்கள் அதனை ஒருபோதுமே கண்டுபிடிக்கவில்லை. அங்குள்ள ஒருபெரிய பாலத்தின் அருகிலிருந்த ஒருமரத்தின்பக்கமாக அது புதைக்கப்பட்டுக் கிடந்தது. 1914ஆம் ஆண்டு இந்தப்பொக்கிஷம் சேமமாயிருந்ததுபோல இன்றும் இருந்துவருகிறது.

## இருசோடி இரட்டைப் பிள்ளைகளின் குருபதவி

சுதந்திர அயர்லாந்தில் கொறுவெல்ற் பட்டினத்தைச்சேர்ந்த இருசோடி இரட்டைப்பிள்ளைகள் சென்ற ஆனி மாதம் 16ஆம் திகதியன்று வேறுவேறான இருதிருச்சடங்குகளில குருத்துவாபிஷேகம செய்யப்பட்டிருக்கிறார்கள். மெய்னூத்நகர் புனிதபத்திரிசியார்கல்லூரியில் சீன் லாக்கின், பற்றிக் வார்ககின் ஆகிய இரட்டைப் பிள்ளைகள் இருவரும் டப்ளின்நகர மைக்குவெயிட் அதிமேற்றிராணியாரால் குருப்பட்டம் அருளப்பெற்றனர். அவரால் அன்று குருப்பட்டம அருளப்பட்ட பன்னிருவரில் இவர்களும் அடங்குவார்கள். இவர்களின அயலவர்களான பீற்றர் ஹெஙறி, போல் ஹெஙறி ஆகிய இரட்டைப்பிள்ளைகள் இருவரும் டப்ளின்நகர் ஆல்ஹலோ கல்லூரியில் ஆபிரிக்க கினியா நாட்டைச்சேர்ந்த எல்டோறெற் நகர கவுலிகான் மேற்றிராணியாரால் குருப்பட்டம் அருளப்பட்டனர். மறுநாள் இவ்விருசோடி குரவர்களும் தங்கள் சொந்தப் பட்டினத்திலுள்ள ஆரோக்கியநாதர் கோவிலிலே இருவர்இருவராகக் கூட்டுப்பூசை நிறைவேற்றினபோது பெரும்அருட்சி எழலாயிற்று.

### அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றும்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 31-ந்தேதி புதன்கிழமை (போயாவுக்குமுன் தினம்) பி. ப. 4மணிக்கு சஞ்சூசையப்பர் சிற்றாலயத்தில் ஆரம்பமாகி நடந்தேறும். அங்கத்தவர் நேரகாலத்தோடு சமுகமாகும்படி அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறார்கள். ஆலோசனைச்சங்கம் இம்மாதம் 23-ந்தேதி (போயாவுக்கு முன்தினம் பி. ப. 4-15 மணியளவில் நடைபெறும். ஆலோசனைச்சங்க அங்கத்தவர் இதைத் தயவுசெய்து கவனிக்கவும்.

A. S. FRANCIS of MARY

யாழ்ப்பாணம் சபைக்கர்த்தருக்காக

● "டி. யு.—154" என்றபெயருடன் மூன்றுஎன்ஜின்கள்பூட்டிய அதிபலம்வாய்ந்த இராட்சத விமானம்ஒன்றை ரூஷியாகட்டியிருக்கிறது. இதுவே உலகின் மகாப்பெரிய விமானமாகும். 164பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு 80 முதல் 86தொன்வரை நிறையுடன் மணித்தியாலம் 1,000 கிலோமீற்றர் வேகத்திலும், 11கிலோமீற்றர் உயரத்திலும் இதுபறந்துசெல்லக் கூடியதாம்.

## தந்தையும் இரு மைந்தரும் குருப்பட்டம் பெற்றனர்

ஐக்கிய அமெரிக்கதேச அற்சிசன் நகரிலுள்ள புனித ஆசீர்வாதப்பர்சபை ஆச்சிரமத்திலே வண. இக்னேஷஸ் ஹம்பெஜர் சுவாமியாரும், அவரின் இருபுதல்வர்களான வண. பெனடிக்ற் சுவாமியாரும், வண மத்தியூ சுவாமியாரும் சமீபத்தில் ஆசீர்வாதப்பர்சபைக் குருமாராக ஒருங்கே குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றுள்ளார்கள். முன்னாள் தலைமையாசிரியரான தந்தையாரும், அவர் மனைவியாரும் தம்முளளே செய்துகொண்ட ஒருபொருத்தனைப்படி — அதாவது இருவரிலும் முதலில் எவர் மரணிக்கிறாரோ அவர் மரித்ததும் சீவந்தராயிருப்பவர் சந்நியாச அந்தஸ்தில் உட்படவேண்டுமென்று செய்துகொண்ட பொருத்தனைப்படி—மனைவியார் 1963ஆம் ஆண்டு இறந்துபோகத் தந்தையார் தமது இருபுதல்வர்களையும் பின்பற்றி ஒருநவசந்நியாசராகி அவர்களுடன்சேர்ந்து குருப்பட்டத்துக்குப் படித்துவந்தார்.

**விடைகள் :—**

1. எமது அயலவர்கட்கு நாம் உதவும் விதமே முக்கியமான அளவுகோல்—மத்தேயு 25. 31-46.

2. அந்நியரைப் புதைப்பதற்காக அப்பணத்தைக்கொண்டு ஒரு காணித்துண்டு வாங்கப்பட்டது. மத். 27-7.

3 ஏரோதியாளின் புதல்வி எனவே நற்செய்தி ஏடு கூறுகிறது. மத். 14-6.

4. ஏழு எழுபது முறைகள் மத். 18-22.

5. யாகப்பரினதும், அருளப்பரினதும் அன்னையார் மத். 20-21.

6. பறவைகள் வந்து அவற்றைத் தின்றன மத். 13-4.

7. ஸ்நாபக அருளப்பரின் சீடர்கள் மத். 6-14.

8. அவனது கைகால்களைப் பிணித்து இருட்டறையில் தள்ளும்படி உத்தரவிடப்பட்டது மத். 22-24.

9. பணக்காரன் மத். 19-24.

10. அ. வலைபின்னிக்கொண்டிருந்தார்கள். மத். 4-19.

ஆ. வலை பழுதுபார்த்துக்கொண்டிருந்தார்கள் மத். 4-21.

இ. ஆயத்துறையில் ஆயப்பணங்களை அறவிட்டுக்கொண்டிருந்தார் மத். 9-9.

**புள்ளி விபரம் :**

10-9 உங்களது சுவிசேஷ அறிவு மெச்சத்தக்கது 8-7 நன்று. 6-5 பரவாயில்லை. 4-0 நீங்கள் சுவிசேஷ அறிவு அற்றவர்கள். தயவாக நற்செய்தி ஏடுகளை நன்கு படியுங்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நிக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1968ஆம் ஆடிமீ 20-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org